# ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த மோடி அரசைக் கண்டித்து கழகம் நடத்திய பொதுக்கூட்டங்கள்!



சேலம் மத்திய மாவட்டக் கழகத்தின் சார்பில் தாதகாபட்டி பகுதி கேட் மைதானத்தில் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசை கண்டித்து நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் கழக கொள்கைபரப்பு செயலாளர் திருச்சி. சிவா. எம்.பி. மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன், தலைமை கழக செய்தி தொடர்பு குழு செயலாளர் கான்ஸ்டன்டைன். ரவிந்திரன், மாநகர செயலாளர் பா. ரகுபதி, பகுதி கழக செயலாளர். ஏஸ். சரவணன், ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.



தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் திருச்சி தெற்கு மாவட்டம் சார்பில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. மாநகர செயலாளர் மதிவாணன் வரவேற்றுப் பேசினார். தலைமை கழக பேச்சாளர்கள் தீக்கனல் கருணாநிதி, சாவல்பூண்டி சுந்தரேசன், திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் இனிகோஇருதயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.



தஞ்சை தெற்கு மாவட்டம், பேராவூரணியில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசின் பட்ஜெட்டை கண்டித்து மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் ச.முரசொலி எம்.பி, வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ், தலைமைக் கழக பேச்சாளர் விஷார் க.தமிழரசன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்.அசோக்குமார் எம்.எல்.ஏ உள்ளிட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்து வஞ்சித்த பாசிச பாஜக மோடி அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் கெங்கவல்லி அண்ணா திடலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூர் செயலாளர் சு. பாலமுருகன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் சித்தார்த்தன் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாநில சட்டத்திட்டத் திருத்தக்குழு செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.கிரிராஜன், தலைமை கழக பேச்சாளர் சென்னை மதிவாணன் ஆகியோர் கண்டன உரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ரேகா பிரியதர்ஷினி, தமிழ்செல்வன், சந்திரமோகன், முத்துலிங்கம், குணசேகரன் , சோமசுந்தரம், மனோகரன், சங்கர், ராஜா, கோபால், குணசேகரன் ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், உமாசங்கர், மாணிக்கம், விஜயகுமார், ரத்தினவேல், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், அழகுவேல் , டாக்டர் வே.செழியன், மணி, ராஜேந்திரன், மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து, பாலமுருகன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் ,சார்பு அணி நிர்வாகிகள் , கழக முன்னோடிகள் என திரளாக கலந்து கொண்டனர்.



தஞ்சை மத்திய மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டத்தில் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, திருப்பூர் மனோகர் பாபு உள்ளிட்டோர் பங்கேற்று கண்டன உரையாற்றினார்கள், மாவட்ட செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, எம்.இராமச்சந்திரன், கே.டி. மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகர செயலாளர் மேயர் சண்.இராமநாதன் மாநில நிர்வாகிகள் சி.இறைவன், த.காரல்மார்க்ஸ், எஸ்.ஜித்து, தொகுதி பார்வையாளர் நாகை .மனோகரன், மாவட்ட பொருளாளர் அண்ணா, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளிட்ட ஆயிரக்கணக்கான திமுக வினர் பங்கேற்றனர்.



ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கபட்டு வருவதை கண்டித்து, தலைமை கழக அறிவிப்பின்படி நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன பொதுக்கூட்டம், கோத்தகிரி மார்கெட் திடலில் மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில், தேர்தல் பணி செயலாளர், அரசு கொறடா கா.ராமசந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லைகண்ணன் வரவேற்றார். கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் கந்திலிகரிகாலன், ஆலந்தூர் க. ஒப்பிலாமணி, ஜே.வீரமணி ஆகியோர் சிறப்புரை யாற்றினர். மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், நகர ஒன்றிய – பேரூர் கிளை கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

### சிறுபான்மையின மாணவர்களை போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்தும்

# ‘நயா சவேரா’ திட்டம் நிறுத்தப்பட்டது ஏன்?

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!



புதுடெல்லி, பிப். 10–

”சிறுபான்மையின மாணவர்களை அரசு போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்தக் கொண்டு வரப்பட்ட ‘நயா சவேரா’ திட்டம் நிறுத்தப்பட்டது ஏன்? என்று மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி எழுப்பினார்.

அதில் ”சிறுபான்மையின மாணவர்களை அரசு போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்த கொண்டு வரப்பட்ட ‘நயா சவேரா’ திட்டம் நிறுத்தப்பட்டது ஏன்?; முன்னதாக சிறுபான்மையின மாணவர்கள் அரசு பணிகளில் சேர்வதில் ‘நயா சவேரா’ திட்டத்தின் தாக்கத்தை ஒன்றிய அரசாங்கம் மதிப்பிட்டதா?; மேலும் இத்திட்டம் அவர்களுக்கு எவ்வாறு பயன்பெற்றது என்பது ஆய்வு செய்யப்பட்டதா?; இத்திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தும்போது ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசுடன் சேர்ந்து எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? போன்ற கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த ஒன்றிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரன் ரிஜிஜு அவர்கள் ”சீக்கியர், ஜெயின், முஸ்லிம், கிறிஸ்தவர், புத்தர் மற்றும் பார்சி ஆகிய ஆறு அறிவிக்கப்பட்ட சிறுபான்மையின சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை படிப்புகளில் சேர்வதற்கான தகுதித் தேர்வுகள் மற்றும் குரூப் ‘ஏ’, ‘பி’, & ‘சி’ தேர்வுகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் இரயில்வே உள்ளிட்ட ஒன்றிய மற்றும் மாநில அரசு பதவிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு இலவச சிறப்புப் பயிற்சி அளித்து உதவுவதற்காக 2007–08 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் ‘நயா சவேரா’ திட்டம் –தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டம் தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் பதிவு செய்யப்பட்ட முகமைகள் மூலம் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், மொத்தம் 1,19,273 மாணவர்களுக்கு தகுதித் தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது. பல்வேறு நுழைவுத் தேர்வுகளில் வெற்றிகரமாகத் தகுதி பெற்ற மாணவர்களின் விவரங்கள் அந்தந்த வலைதளங்கள் மூலம் சுயாதீனமாகச் சரிபார்க்கப்பட்டு, பயிற்சி பெற்றவர்களின் கருத்துகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும், திட்டத்தின் செயல்திறனை அளவிடுவதற்காக, அவ்வப்போது தனியார் நிறுவனங்கள் மூலம் இந்தத் திட்டம் மதிப்பீடு செய்யப் பட்டது. ஆனால் இந்தத் திட்டம் 2022–23 முதல் நிறுத்தப்பட்டுள்ளது என்று பதிலளித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் எஸ்.கே.நவாப், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 08.02.2025. தி.மு.க.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட திமுக சார்பில், ஓரவஞ்சனையான நிதி பகிர்வு ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காமல் அநீதி இழைத்த மோடி அரசை கண்டித்து, அரவக்குறிச்சி பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி, தலைமை கழக பேச்சாளர்கள் சென்னை த. அரங்கநாதன், நெல்லை ஜான் சிறப்புரையாற்றினர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் மற்றும் ஊராட்சி கிளைகள் விவரம் மற்றும் நகரக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி நகரம், **கிருஷ்ணகிரி கிழக்கு**, **கிருஷ்ணகிரி மேற்கு** ஆகிய 2 நகரக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்சொன்னவாறு பிரிக்கப்பட்ட **கிருஷ்ணகிரி கிழக்கு**, **கிருஷ்ணகிரி மேற்கு** ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் மற்றும் ஊராட்சி கிளைகள் கொண்டதாக அமையும்.

**கிருஷ்ணகிரி கிழக்கு நகரம்:** 1.பாரதியார் நகர், 2.திருவள்ளுவர் நகர், 3. தேவசமுத்திரம், 4.நாராயணன் கொட்டாய், 5.பூசாரி கொட்டாய், 6.மாரப்பன் கொட்டாய், 7.அய்யர் கொட்டாய், 8.பொன்மலைகுட்டை, 9.ஜெ.ஜெ.நகர், 10. பெரியார் நகர், 11.ஜக்கப்பன் கொட்டாய், 12.காந்தி நகர் ஆகிய 12 ஊராட்சி கிளைகள் மற்றும் 17வது வார்டு முதல் 33வது வார்டு வரையிலான 17 வார்டுகள்.

**கிருஷ்ணகிரி மேற்கு நகரம்:** 1.கட்டிக்கானப்பள்ளி, 2.மேல்புதூர், 3.கீழ்புதூர், 4.செல்லாண்டி நகர், 5.புதிய வீட்டு வசதி வாரியம்2, 6.புதிய வீட்டு வசதி வாரியம்1, 7.வினாயகர் கோவில் நகர், 8.சத்யசாய் நகர், 9.வஹாப் நகர், 10.வஹாப்நகர் கிழக்கு, 11.பெருமாள் நகர், 12.ராஜாஜி நகர் ஆகிய 12 ஊராட்சி கிளைகள் மற்றும் 1வது வார்டு முதல் 16வது வார்டு வரையிலான 16 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கிருஷ்ணகிரி கிழக்கு நகரம்**

பொறுப்பாளர் : எம். வேலுமணி, 43பி, சீனிவாச காலனி,
புதுப்பேட்டை, கிருஷ்ணகிரி.

**கிருஷ்ணகிரி மேற்கு நகரம்**

பொறுப்பாளர் : என். அஸ்லாம் ரகுமான் ஷரிப், 15/5, விநாயகர் தெரு,
ராசு வீதி, கிருஷ்ணகிரி 635 001.

“அண்ணா அறிவாலயம்” **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச்செயலாளர்,
நாள் : 08.02.2025. தி.மு.க.